# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THIRUVIDAIMARUTHUR.

| | | | |
|---|---|---|---|
| Deposition of Witness for | : DW-2 | Date | : 17.10.2024 |
| Case No. | : **O.S.497/2019** | Nationality | : Indian |
| Name | : முருகன்(எ) முத்தையன் | Religion | : |
| Father's/Husband's Name | : கிருஷ்ணமூர்த்தி | Age | : 47 |
| Village | : | | |
| Taluk | : | | |

பி.வா.சா.2

சாட்சி சத்திய பிராமாணம் செய்து விசாரிக்கபடுகிறார்.

**வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

எனக்கு சாட்சியம் அளிக்க நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்ததா என்றால் வந்தது. நான் எடத்தெருவில் வசித்து வருகிறேன் என்பதற்கான ஆவணம் எதுவும் பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ளாரா என்பது தெரியுமா என்றால் தெரியவில்லை. 2ம் பிரதிவாதி கிட்டு எனது மூத்த சகோதரர் என்றால் சரிதான். கிட்டு கேட்டுகொண்டதன்பேரில் தான் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ள முகவரில் எத்தனை வருடங்களாக குடியிருந்து வருகிறேன் என்றால் 7 வருடங்களாக குடியிருந்து வருகிறேன். 2ம் பிரதிவாதி நான் 2 வருடங்களாக குடியிருந்து வந்ததாக சொல்லியுள்ளது தவறு என்றால் சரிதான். தாவா சொத்து விவரம் பற்றி நான் தெரிந்து கொண்டேன் என்றால் சரிதான். தாவா சொத்திற்கு 2ம் வாதி உமாபதி பெயரில் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் பட்டா போலியாக வழங்கப்பட்டுள்ளது. முறையாக விசாரணை செய்யப்பட்டுதான் அவரது பெயரில் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. தாவா சொத்தில் எனது தகப்பனாருக்கு உரிமையுள்ளதா என்றால் உள்ளது. எனது தகப்பனாருக்கு தாவா சொத்தில் எவ்வித உரிமையும் இல்லை என்றாலும்

நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. என்னிடம் காட்டப்பட்ட புகைப்படத்தில் சர்வே எண் எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். ஆவணங்கள் அனைத்தும் கிட்டுவால் தயார் செய்து தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றாலும் நான் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. 1ம் வாதிக்கு திருமணம் ஆன பிறகு எனக்கு அவருடன் எந்த தொடர்பும் இல்லை என்றால் கொஞ்ச நாட்கள் பேசினார் அதன் பிறகு பேசவில்லை. 2ம் வாதி பெயரில் ஏற்பட்டுள்ள பட்டாவை ரத்து செய்வதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல. எடுத்துள்ளேன். ரத்து செய்ய நடவடிக்கை எடுத்ததற்ககான ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கு தாக்கல் செய்த காலத்தில் நான் வெளிநாட்டில் இருந்தேன் என்றால் சரிதான். அப்போது எனது மனைவி மற்றும் எனது குடும்பம் அக்ரஹாரத்தில் குடியிருந்தோம் என்றால் சரியல்ல. தாவா சொத்தில்தான் குடியிருந்து வந்தார்கள். நாங்கள் எந்த காலத்திலும் தாவா சொத்தில் குடியிருந்து வரவில்லை என்றாலும், எனது சகோதரருக்காக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

x

Taken down by Typed to my dictation
in Open Court read over to the witness
admitted and acknowledged by
him/her to be correct.

SIVAPALANI

Digitally signed by SIVAPALANI
Date: 2024.10.18 18:42:42 +0000

District Munsif cum Judicial Magistrate,
Thiruvidaimarudur.